விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 131 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 16 சனிக்கிழமை (29.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






### 13ஐ முழுமையாக அமுல்படுத்த

## இந்தியா தொடர்ந்தும் இலங்கையை வலியுறுத்தும்

### இந்திய உயர்ஸ்தானிகர் உறுதி



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் இலங்கையில் மாகாண சபைத் தேர்தல்களை முற்கூட்டியே நடத்துவதற்கும் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தமிழ் எம்.பிக்களிடம் உறுதியளித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.எம்.எப் தொடர்பான வாக்கெடுப்பு

## 95 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

### கூட்டமைப்பு புறக்கணிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) இலங்கைக்கு வழங்கப்பட்ட கடனுதவி தொடர்பான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நேற்று 95 மேலதிக வாக்குகளால் நிறைவேற் 11

### விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்ய

## மீண்டும் தடை ஏற்படுத்திய தொல்பொருள் திணைக்களம்


### பொலிஸாரும் உடந்தை



(வவுனியா)

வவுனியா வெடுக்குநாறி மலையில் ஆலய விக்கிரகங்களை பிர 11




# வவுனியா வெடுக்குநாறி மலையில் விக்கிரகங்கள் மீண்டும் பிரதிஷ்டை

**(வவுனியா) வவுனியா வெடுக்குநாறி மலையில் விக்கிரகங்கள் நேற்று மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. சிவலிங்கம், அம்மன், முருகன், பிள்ளையார், வைரவர், நாகதம்பிரான் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.**

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆலய விக்கிரகங்கள் கடந்த மாதம் இனம் தெரியாத நபர்களால் உடைத்து அழிக்கப்பட்டதுடன் சிலைகளும் களவாடப்பட்டிருந்தது.

இதனையடுத்து ஆலயத்தில் மீண்டும் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யும் ஏற்பாடுகள் பல தரப்புக்களாலும் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் நீதிமன்ற வழக்கினை காரணம் 11

## முல்லை சிலாவத்தையில் அர்ச்சகர் வெட்டிக் கொலை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் அர்ச்சகர் ஒருவர் நேற்று அதிகாலை வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் முல்லைத்தீவு சிலாவத்தையில் மரண கிரியைகள் செய்யும் 11

### பல்வேறு தரப்பினரின் கோரிக்கைக்கு அமைய

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்ப்பிப்பது பிற்போடப்பட்டது

(கொழும்பு)

பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளுக்கு அமைய, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைப் பிற்போட தீர்மானித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ பாராளுமன் 11

## அநீதியான செயற்பாட்டுக்கு எதிராக ஒன்றிணையுங்கள்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்ப முன்வரும் எந்தவொரு தரப்பினருக்கும் எமது ஆதரவை வழங்கத் தயாராகவுள்ளோம்.

எனவே மக்களும் அநீதியான செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும் என்று 11

### சீரணி நாகபூசணியில்

## 1008 பானையில் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி 11

## முல்லைத்தீவைச் சேர்ந்த 7 பேர் தமிழகத்தில் தஞ்சம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 7 பேர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் அகதிகளாக நேற்று வெள்ளிக்கிழமை தனுஷ்கோடி மணல் திட்டு பகுதியை சென்றடைந்துள்ளனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். நாவற்குளி A9 வீதியில்
இரண்டாம் காணி 10 பரப்பு
காணி விற்பனைக்கு உண்டு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்பு உள்ள சூழல்
- நன்னீரூற்று
- 1 பரப்பின் விலை 650,000/- மட்டும்

(15404)

**076 436 5814**
**077 065 4525**

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE



அன்னை முத்துமாரி
பேருந்து சேவை
இனிவரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும்
பெயரில் அதே
நிர்வாகத்தின் கீழ்
இயங்கும் என்பதை
அறியத் தருகின்றோம்

077 544 8503

(15337)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வயதான
அம்மாவை பராமரிக்கவும்
வீட்டு வேலைகள் செய்யவும்
பணிப்பெண் தேவை.
தொடர்பு

**076 416 9292**

(15403)

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம்
1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில்
பிறந்த சகல வசதிகளுடைய Account
Assistant ஆக பணிபுரியும்
மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு

**077 367 1062**

(15387)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15389)

**076 755 8606, 077 638 5683**





விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் கனடா கனேசு சுவேந்திரன் (ஒந்தி) அவர்களின் நிதி அனுசரணையுடன் 60 ஆவது ஆண்டு விழா 25.04.2023 செவ்வாய்க்கிழமை அன்று வெகு விமர்சையாக நடைபெற்றது. தலைவர் செல்லத்துரை சுரேந்திரகுமார் அவர்களின் தலைமையில் பிரதம விருந்தினராக கு.சுவேந்திரன் இல.3, மூத்த விநாயகர் வீதி நல்லூரை சேர்ந்தவரால் நடத்தி வைக்கப்பட்டது. எமது நிலையத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.


**ஸ்ரீ விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்**
**வசந்தபுரம், V.H லேன், இருபாலை கிழக்கு, கோப்பாய்.**

(15394)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம்
  காலை 6 முதல் மாலை 6 வரை



**முழுக்காணிகளும் பிரதான க்காபற் வீதி முகப்புடனே உள்ளது.**

**076 911 9371, 076 165 3129**

(15389)

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 31.03.2023 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி பூலோகம் நடராஜா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 28.04.2023 நேற்று வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் 30.04.2023 நாளை ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (15326)

துவாரகை வீதி,
உரும்பிராய் மேற்கு,
கோண்டாவில். (கோகுல வீதி ஊடாக)

021 221 2687
021 205 3955

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**
**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15401)

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**
**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15401)

**077 814 7389, 077 986 5457**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரன்னகொடவை போன்றே ஏனையவர்களும் அவதானிக்கப்படுவார்கள்

## அமெரிக்க தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ள நிலையிலேயே இந்த விடயத்தை அமெரிக்கத் தூதரகம் வெளிப்படுத்தியுள்ளது.**

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேலும் இலங்கை அதிகாரிகளுக்கு அமெரிக்காவினால் தடைவிதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரக பேச்சாளர் பதில் வழங்கியுள்ளார்.

ஆங்கில செய்தித்தாள் ஒன்று எழுப்பிய இந்த கேள்விக்கு பதிலளித்துள்ள அமெரிக்க தூதரகத்தின் பேச்சாளர், ஒருவர், கொழும்பில் உள்ள தூதரகம், மற்றும் வெளிவிவகாரத் திணைக்களம் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் இவ்வாறான விடயங்களை மீளாய்வு செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியையும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களுக்கான பொறுப்புக்கூறலையும் மேம்படுத்துவதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது என்றும் அமெரிக்க தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு சீர்திருத்தத்தை ஊக்குவித்தல் உட்பட நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதில் இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா இணைந்து பணியாற்றுகிறது என்றும் இந்த நடவடிக்கைகள் காரணமாக இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் இருதரப்பு உறவுகளில் பாதிப்பு ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# சிகிரியா படிகளை சீரமைக்க 4 கோடி நிதி உதவி



(கொழும்பு)

சிகிரியா ஓவிய குகைக்கு செல்லும் படிகளை சீரமைக்க 4 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க யுனெஸ்கோ தீர்மானித்துள்ளது.

இந்த நிதி அடுத்த மாதமளவில் கிடைக்குமென மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

அதனூடாக தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படும் படிக்கட்டுகள் விரைவில் புனரமைக்கப்படும் என மத்திய கலாசார நிதியம் குறிப்பிடுகின்றது.

இதேவேளை, சிகிரியாவில் சுற்றுலாவை மேம்படுத்தும் விசேட திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகளின் கட்டணத்தை ஒழுங்குபடுத்தவும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டுவதற்கும் கட்டண முறைமையை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இலங்கையில் அமைக்கும் சீனா

(கொழும்பு)

இலங்கையில் நாளாந்தம் 4 தொன் கச்சா எண்ணெய் சுத்திகரிக்கக்கூடிய புதிய சுத்திகரிப்பு நிலையம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

சீன முதலீடாக இலங்கையில் ஸ்தாபிக்கப்படும் என இலங்கைக்கான சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் மல்வத்து அஸ்கிரி மகாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போதுள்ள கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 60 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட மிகவும் பழைமையானது. இதனால் புதிய தொழில்நுட்பத்துடன் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புதிய சுத்திகரிப்பு நிலையம் திறக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் எரிபொருள் விநியோக நடவடிக்கையில் பல மாற்றங்கள் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை விரைவில் திறக்க சீனா திட்டமிட்டுள்ளதாகவும் சீனத் தூதுவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு 120 முதல் 140 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்ய சீனா திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# எலிக்காய்ச்சலினால் இந்த ஆண்டில் 19 உயிரிழப்புகள் பதிவானது

(கொழும்பு)

எலிக்காய்ச்சல், எலியின் சிறுநீர் மூலம் பரவினாலும் எருமை மற்றும் நாய் ஆகியவற்றிலிருந்தும் பரவுவது கண்டறியப்பட்டுள்ளதாகவும் தொற்றுநோய் நிபுணர் எரந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதன் காரணமாக எலி பெருக்கத்தை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் இன்று வரை 224 எலிக்காய்ச்சல் பதிவுகள் பதிவாகி யுள்ளன.

இந்தக் காலப் பகுதியில் எலிக்காய்ச்சலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 எனவும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இந்த மரணங்களில் 13 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரும் உள்ளதாகவும் தற்போது மாவட்டத்தில் அதிகளவான நோயாளர்கள் கரந்தெனிய, பத்தேகம, இமதுவ, பலபிட்டிய, உடுகம, யக்கலமுல்ல, ஹபராதுவ ஆகிய பிரதேசங்களில் பதிவாகியுள்ளதாகவும் அவர் விசேட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக காலில் புண்கள் அல்லது காயங்கள் இருந்தால் வயலுக்கு செல்ல வேண்டாம். சேற்று நீரில் செல்ல வேண்டாம். இந்த எலிக்காய்ச்சல் எலி சிறுநீரில் உள்ள பக்டீரியாவால் ஏற்படுகிறது. இந்த பக்டீரியா ஒருவரது உடலுக்குள் செல்லாமல் இருந்தால் இருபது நாட்கள் வெளியில் இருக்கும். இந்த பக்டீரியா குப்பை கிடங்குகளிலும் காணப்படுகிறது.

எனவே, காய்ச்சல், உடல் வலி, வயலில் வேலை செய்த பின் தலைவலி, போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக தகுதியான மருத்துவரை அணுகவும் என அவர் தெரிவித்தார். (நி)

# அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டுகள்

## தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

வாக்குப்பதிவு தொடர்பாக உள்ளூராட்சி அமைப்புகளால் அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் மற்றும் முடிவு ஆவணங்கள் தவிர மற்ற அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவு திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர், அச்சுப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் அச்சகத்திற்கு தேவையான பொலிஸ் பாதுகாப்பு உள்ளிட்ட வாக்குச் சீட்டுகள் மற்றும் பெறுபேறு ஆவணங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் என கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் உள்ளூராட்சி அதிகாரிகள் 190 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான அச்சுப் பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அதற்காக அரசாங்க அச்சகத்திற்கு இன்னும் சுமார் 40 மில்லியன் ரூபாய் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார். (நி)

# விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்கு விண்ணப்பிக்க மீண்டும் சந்தர்ப்பம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு பரீட்சகர்களை இணைத்துக்கொள்ள பரீட்சைகள் திணைக்களம் மீண்டும் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்ப்பிக்க முடியுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பௌதீகவியல், இரசாயனவியல், கணிதம், விவசாய விஞ்ஞானம், உயிரியல், இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடகக் கற்கையும், வணிகக்கல்வி, பொறியியற் தொழில்நுட்பவியல், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விடைத்தாள் மதிப்பீட்டுக்கு முந்தைய காலக்கெடுவுக்குள் விண்ணப்பிக்காத ஆசிரியர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள், தமது பிள்ளை அல்லது குடும்ப உறுப்பினர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருப்பின், அவர்கள் தோற்றிய பாடம் அல்லாத ஏனைய பாடங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க முடியுமென என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (நி)

# மின்சார சபையின் மறுசீரமைப்பு திட்டத்திற்கு உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்

(கொழும்பு)

மின்சார சபையின் மறுசீரமைப்பு திட்டத்திற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது.

மின்சாரத்துறை நிபுணர்கள் உட்பட பொறுப்பான அமைச்சர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கமைய, அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு கடன் உதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மின்சார துறையின் மறுசீரமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள், மின் கட்டணங்கள், மின் துறையில் உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை குறித்தும் இந்த கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் 116 ஆவது ஆண்டு நினைவு பெருவிழா -2023

## அழைப்பிதழ்



**இடம் : சதாவதானி அரங்கு, தம்பசெட்டி, பருத்தித்துறை**
**காலம் : 29.04.2023 (சனிக்கிழமை) பி.ப 5.00 மணி**

**தலைவர்**
**திரு. பாலகிருஷ்ணன் கஜேந்திரன்**
(தலைவர் – சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்)

**பிரதம விருந்தினர்**
**பேராசிரியர் திரு.சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா**
(துணைவேந்தர் – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்**
**வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்தி**
(பணிப்பாளர் – யாழ் போதனா வைத்தியசாலை)

**கௌரவ விருந்தினர்கள்**
**திரு. மு.க.முத்துக்குமார்**
(சிரேஷ்ட சட்டத்தரணி)
**திரு. நடா.ராஜீவன்**
(சட்டத்தரணி)
**திரு. கந்தப்பு தங்கராசா**
(தலைவர்– சதாவதானி சி.க.கூ சங்கம்)

(C-6449)

### நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை
- வரவேற்பு நடனம்
- தலைமையுரை
- சதாவதானி குருபூசைத் தினப் போட்டியில் முதலாமிடம் பெற்ற பேச்சுக்கள்
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- சிறுவர் கலை நிகழ்வுகள்
- நன்றியுரை

ஈழத்தின் புகழ் பூத்த நாடகக்கலைஞர்கள் வழங்கும் நகைச்சுவை நாடகம்

நேரடி ஒளிபரப்பு : https://youtube.com/live/rgBfnThYBpY?feature=share

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. செ.கஜன்
செயலாளர்

விழா சிறப்புற வாழ்த்துவோர்
நியூ மாணிக்கப்பிள்ளை ரேடேர்ஸ்
இல 42, பிரதான வீதி, பருத்தித்துறை.

# Invitation for Bids (IFB)
# Jaffna Municipal Council
# Purchasing of Street Lights

## JMC/PO5/MSO/Street Light/2023

1. The Chairman Procurement Committee (PC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Chief Engineer, Jaffna Municipal Council.TP:0212221186 Fax:0212221187 E-Mail: mcjaffnamailc@yahoo.com office hours from 09:00 hrs. to 15:00 hrs.
4. Qualifications requirements include: Possessing the minimum 3 years' experience in selling and having island wide maintenance in the particular brand and field. A margin of preference for eligible locally produced goods offered shall not apply. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from **29th April 2023 until 19th May 2023 from 09:00 hrs. to 14:00 hrs.** on the submission of a written application and upon a payment of non-refundable fee of Rs.2000.00 + All Taxes the payment method will be cash or bank draft drawn in favor of **Commissioner, Jaffna Municipal Council.**
6. Bids must be delivered to the address given below on or before 19th May 2023 at 15.00 hrs. Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
7. A pre bid meeting will be held at Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on **11th May 2023** at 14:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
8. The address referred to above is **Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna.** The Bid Name & No must be mentioned on the top of the envelop.The bid can be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.
9. The bid validity shall be until:**21.07.2023 (63 days after the deadline for bid submission)**

| S. No. | Bid Name & No. | Name of the Item | Bid Security | | |
|---|---|---|---|---|---|
| | | | Period of Contract | Amount | Required Period |
| 01 | Purchasing of Street Lights JMC/PO5/MSO/Street Light/ 2023 | 50 Watts single high power COB LED Street Light – 189 Nos. | 45 Days | 72,000.00 | 18.08.2023 |
| | | 100 Watts double high power COB LED Street Light – 81 Nos. | | | |

Chairman,
Procurement Committee,
Jaffna Municipal Council,
Point Pedro Road, Nallur.

(C-6447)

# மரண அறிவித்தல்



தோற்றம்
24 - 04 - 1947

மறைவு
28 - 04 - 2023

## இரத்தினம் தவராசா

கொம்மந்தறை வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தவராசா அவர்கள் 28.04.2023 (வெள்ளிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - அன்னம்மா தம்பதியினரின் இளைய மகனும் மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் மகாலிங்கம், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலீபன், கேசவன், தீபா, கேமா ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரிதாஸன், செந்தில்குமரன், றோயனா, ராஜ்குமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜலோன், வரோதயன், கஜானா, சபினாஷ், சஷ்திகா, கௌசிகன், கௌதமன், கௌசல்யன், கௌரீசன், கரீஸ்மன், தக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.04.2023 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணியளவில் கொம்மந்தறை வல்வெட்டித்துறையில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

(C-6448)

தகவல்: குடும்பத்தினர்
077 607 0680
076 546 7631

# மரண அறிவித்தல்



தோற்றம்
1993 - 01 - 21

மறைவு
2023 - 04 - 28

## உலகநாதன் பவித்திரன்

காரைநகர் கருங்காளி மற்றும் சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு கருவேலடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட உலகநாதன் பவித்திரன் அவர்கள் 28.04.2023 வெள்ளிக் கிழமை முருகனடி சேர்ந்தார்.

அன்னார் உலகநாதன் (சந்திரன்) - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் சிந்துஜா, கஜந்துகன், கஜந்துகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அகிலன், சதீசன், துவாரகா ஆகியோரின் மைத்துனரும் நவமணிதேவி, சத்தியதேவி, சித்திரா, அம்பிகாவதி ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சற்குணராஜா ஆகியோரின் மருமகனும் சுகந்தன், சுகன்யா, கௌசிகன், கபிசன், டினோஷன், நீரா, கௌதன், மதுசன், மதுசா, மைக்கல் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் சாய், சரீஸ், நடாசா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற நடராசா, குகனேசன், சிவபாலன், கோனேசலிங்கம் ஆகியோரின் பெறாமகனும் மற்றும் பொன்னம்மா, காலஞ்சென்ற புஸ்பம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No. 27, கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(15402)

தகவல்:
உலகநாதன் (சந்திரன்)
077 937 1134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

**Supply of Skilled, Semiskilled and Unskilled Workers to the University of Jaffna- 2023/2024**

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m on **19th May 2023**

2. Period of contract should be 365/6 days subject to a performance evaluation period of 60 days.

3. Expected project cost per annum

| | |
|---|---|
| Total expected cost (annual) | 45.6Million |
| Jaffna premises | 24 Million |
| Ariviyalnagar premises | 21.6 Million |

4. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.

4.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.

4.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least **Rs. 60 Million.**

4.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 20 Million.**

4.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be atleast 30.

5. Interested bidders may obtain further information from Assistant Registrar, General Administration, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.
Contact numbers: - Tele: 021 222 6517, Fax:- 021 222 6517.

6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day upto **15th May 2023** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. **5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account Number 970000060000276** at any Branch of People's Bank in Island wide.

7. Bidders are strongly advised to attend the **Pre-bid meeting on 10th May 2023 at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.

8. Bids shall be delivered or sent by registered post to the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on or before 19th May 2023 or** be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend.

9. Bids shall be valid for a period of 91 Days (should be as at 18th August 2023) from the date fixed for closing of bids or any extended period.

10. All bids shall be accompanied by a bid security for and which shall be;

- In the form included with the Bidding document.
- In favour of Vice-Chancellor, University of Jaffna.
- For an amount of Rs. 50,000.00 Valid up to 15th September 2023 (120 days from the date of closing of bid)
- Issued by one of the agencies

a. A bank operating in Sri Lanka.
b. A bank based in another country but the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka.

Chairman,
Procurement Committee,
University of Jaffna,
29.04.2023.

(C-6446)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**பேருந்து, வான், முச்சக்கரவண்டி மற்றும் சிறியவகை காவுவண்டி, (Mini Truck) போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (On call) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல் (Invitation for Bid) -2023-2024**

தவிசாளர், கொள்வனவுக் குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதிவாய்ந்த கம்பனிகள் அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் | தேவைப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 10-16 | 05 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.2 | பிரயாணிகள் வான், /Passenger Van | 08-10 | 05 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus | 42-54 | 05 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck 1500 – 2500 kg | 02 | 02 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.5 | முச்சக்கரவண்டி / Three wheeler | 03 | 01 | கிளிநொச்சி |

விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை மே மாதம் பதினைந்து (15) ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

2.சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.

3.வாகன முற்பதிவானது 2012 ஆம் ஆண்டிற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4.வாகனங்கள் சேவை வழங்கும் நாட்களில் அதன் கிலோமீற்றர் மற்றும் நேரம் ஆகியவற்றின் பதிவுகள் அனைத்தும் பல்கலைக்கழகத்தின் சார்பில் உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம் அவர்களால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரால், மேற்பார்வை செய்யப்படும்.

5.பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதான வளாகத்தில் இருந்தும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தில் இருந்து கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

6.நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் அவசியமானது.

- பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.
- குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
- வருடாந்த வருமானம் கடந்த மூன்று (03) வருடங்களில் குறித்த ரூபாவினை குறைந்த வருமானமாக ஈட்டியிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van (12 - 16 இருக்கைகள்) | ரூ 500.000.00 |
| 1.2 | பிரயாணிகள் பேருந்து /Passenger Van (08 - 10 இருக்கைகள்) | ரூ 500.000.00 |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus ( 45 - 10 இருக்கைகள்) | ரூ 500.000.00 |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck 1500 -2500 kg (02 இருக்கைகள்) | ரூ 500.000.00 |
| 1.5 | முச்சக்கரவண்டி / Three wheeler (03 இருக்கைகள்) | ரூ 100.000.00 |

- குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

7. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள் மற்றும் வணிகத்தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள் மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு (Bid security) வைப்புப்பணமாக ரூபா 15.000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 12.09.2023 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்பு வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக, காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 3,000.00 நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கி 970000060000276 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

10. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கேள்வி மனுவிற்கான பாதுகாப்புப் பணப் பத்திரம் (Bid security Certificate) மற்றும், விண்ணப்பச் செயலாக்கப் பணப் பற்றுச்சீடு (Application Processing fees) என்பன இணைத்து அனுப்புதல் வேண்டும். மேற்குறித்த பத்திரங்கள் இணைக்கப்படாத, முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

11. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூல ஆவணம் (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2023 - 2024" எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச்சபை, த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 15.05.2023 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

ஏலத் திறப்பு **(Bid Opening)**
01.திகதி:- 15.05.2023
02.நேரம்:- 02:00 pm
03.இடம்:- பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
04.ஏலம் திறக்கப்பட்டு முதல் விலை ஏலங்கள் மதிப்பிடப்படும் பின்னர் தொழில்நுட்ப ரீதியில் ஏலங்கள் மதிப்பிடப்படும்
05.ஏலம் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமுகமளித்தல் வேண்டும்


மேலதிக தகவல்களுக்கு: உதவிப்பதிவாளர்/பொதுநிர்வாகக் கிளை
**Tele: 021 222 6517, Fax:- 021 222 6517.**

**தலைவர்,கேள்விச்சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**

(C-6445)

Fax No: 021 222 6517.Email:administration@univ.jfn.ac.lk.com.University of Jaffna P.O Box 57, Thirunelvely, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை ப்க்தி பூர்வமாக இடம்பெற்றது.
(படம்: சிவசாந்தன்)

# விவசாயத்தை நவீன மயப்படுத்தி வடக்கை முன்னேற்ற நடவடிக்கை

## யாழில் சாகல ரத்நாயக்க

(யாழ்ப்பாணம்)

**விவசாயத்தை நவீன மயப்படுத்தி வடபகுதியில் விவசாய செய்கைகளை முன்னேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என ஜனாதிபதியின் தேசிய பதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.**

வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வறிய மக்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் நெறிப்படுத்தலின் கீழ் வறிய குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி வீதம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வறிய மக்களுக்கு மிகவும் ஒருவரப் பிரசாதமான விடயம் அதே போல விவசாய மக்களுக்கு அதாவது இந்த பெரும் போகத்தின் பின்னர் நெல்லினை விற்பனை செய்வதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட யுத்த அழிவுகளுக்கு பின்னர் நாங்கள் கடந்த சில ஆண்டுகளாக வேறு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதாவது கொரோனா நிலை மற்றும் பொருளாதார நெருக்க டிக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதே போல பொது மக்களால் மேற்கொள்ளப்பட்ட போரா்ட்டங்களுக்கும் நாங்கள் முகம் கொடுக்க வேண்டி இருந்தது.

அதேபோல பொருட்களைக் கொள்வனவு செய்ய வரிசைகளில் நிற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அது வடக்கு கிழக்கு அல்ல தெற்கு மக்கள் என்றல்லாது இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக் குமான பிரச்சினையாக காணப்பட்டது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்த்து நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதோடு மக்களுக்கான பிரச்சினைகளையும் ஒவ் வொன்றாக தீர்க்க நடவடிக்கை எடுத்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு தற்பொழுது நாடு படிப்படியாக முன்னோக்கிச் செல்கின்றது.

நாங்கள் முன் னோக்கி நகர்கின்றோம் ஒரு அடி ஏனும் பின்னோக்கி செல்ல மாட்டோம் என்ற அடிப்படையில் தற்போது நாட்டை முன் னோக்கி கொண்டு செல்லும் திட்டத்தில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

இந்த வேலை திட்டத்தில் முழு இலங்கையும் உள்ளடங்கப்பட்டுள்ளது. வட பகுதியில் விவசாயத்தை நவீன மயப்படுத்தி விவசாயத்தை முன்னேற்றி அதே போல காங்கேசன்துறை துறை முகத்தை இந்தியா நாட்டின் உதவியுடன் அபிவிருத்தி செய்து வர்த்தகத்தை ஏற்படுத்தி வடபகுதியில் சுபீட்சமான நிலை ஏற்படுத்த நாங்கள் முனைகின்றோம்.



புலம்பெயர் அமைப்புகள் இலங்கையில் முதலீடுகளை செய்து நாட்டு மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்ற ஒத்துழைக்குமாறு தற்போதைய அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அழைப்பினை அனைவரும் ஒன்றிணைந்து ஏற்றுக் கொள்வோம் என தெரிவித்தனர். (4-6-33)

# பேருந்து மோதியதில் ஒருவர் படுகாயம்

வவுனியா, குழுமாட்டுச் சந்தியில் இராசேந்திரகுளம் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச்சென்ற பேருந்து வீதியில் சென்றவரை மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

குழுமாட்டுச்சந்தியில் வீதியினை கடக்க முற்பட்ட நபரையே ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மோதியுள்ளது. இவ்விபத்தில் படுகாயமடைந்த நபர் வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெளுக்குளம் பொலிஸார் சாரதியினை கைது செய்துள்ளதுடன், பேருந்தினையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். (4-6-250)

# இராசிபலன்

29.04.2023
சித்திரை 16, சனிக்கிழமை
நவமி முன்னிரவு 6.31 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 1.01 மணிவரை
சுபநேரம் -2.58-4.28 மணிவரை
இராகுகாலம்-8.58-10.28 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூராடம், உத்தராடம்

**வளவன்**

**மேஷம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகள் குடும்பப் பொறுப் புணர்ந்து நடப்பர்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல் உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**ரிஷபம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** உறவினர்கள் நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்** மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுக்காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**தனுசு** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.

**மீனம்** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகமாகப் பேசுபவன் குறைவாகவே சிந்திக்கிறான்.**

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**எவரிடமும் எளிதாகப் பழகும் இனிய சுபாவம் பெற்ற மிதுன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 22.04.2023 முதல் உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். எனவே தொழில் வளர்ச்சி திருப்தி தரும். உங்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றங்களைக் காணப் போகிறீர்கள். உதிரி வருமானங்களும் வாகன யோகமும் உண்டு. ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

**குரு இருக்கும் இடத்தின் பலன்!**

மகத்துவம் வாய்ந்த குரு பகவான் நவக்கிரகங்களில் நல்ல விதமான பார்வையைக் கொடுப்பார் என்று போற்றப்படுவார். அவர் உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான குரு, லாப ஸ்தானத்திற்கு இப்போது வரும் இந்த நேரம் பொருளாதாரத்தில் மிகப்பெரிய வளர்ச்சி காலம் இது என்பதால் சுறுசுறுப்பாக செயற்பட்டு முன்னேறுவீர்கள்.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

"குரு பார்த்தால் கோடி தோஷ நிவர்த்தி" என்பது பழமொழி. அந்த அடிப்படையில் இப்பொழுது பெயர்ச்சியாகி இருக்கும் குரு பகவான் 3, 5, 7 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க வாய்ப்புகள் வந்து சேரும். திசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்கள் சிறப்பான பலன்களைக் காண்பர். 3 ஆம் இடம் தைரிய ஸ்தானம் என்பதால் துணிந்து சில முடிவுகளை எடுப்பீர்கள். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். சரிந்து கிடந்த பொருளாதாரம் சகஜ நிலைக்கு வரும். குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப்பெறுகின்றது. எனவே பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய யோகங்கள் அனைத்தும் வரப்போகின்றது. சண்டை போட்ட உறவினர்கள் சமாதானமடைவர். தொழில் வியாபாரத்தில் புதிய யுக்திகளைக் கையாண்டு லாபத்தை குவிக்க முற்படுவீர்கள். உத்தியோகத்தில் நல்ல வேலைவாய்ப்பு அமையும்.

பரணி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் பரணி நட்சத்திரக்காலில் சுக்கிர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது மறக்க முடியாத சம்பவங்கள் நிறைய நடைபெறும். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே பிள்ளைகளின் வழியே சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். கல்யாணம், காதுகுத்து, கட்டடத் திறப்புவிழா போன்றவை கைகூடும் நேரமிது. பூர்வீகச் சொத்துக்களில் இதுவரை இருந்த பிரச்சினைகள் தீர்விற்கு வரும். பழைய வாகனங்களை கொடுத்து விட்டு புதிய வாகனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். உல்லாசப் பயணங்களால் உற்சாகம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் பணியாளர்கள் பக்கபலமாக இருப்பர்.

கார்த்திகை நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான சகாய ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சூரியன். அவரது சாரத்தில் கார்த்திகை நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது சகாயங்கள் அதிகம் கிடைக்கும்.

உங்களுக்கு நெருக்க மாவர். 4 இல் கேது சஞ்சரிப்பதால் கட்டிய வீட்டைக் கொடுத்து விட்டோமே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது புதிய வீடு அமையும். ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை செலுத்துவது நல்லது.

**குருவின் வக்கிர காலம்!**

(12.9.2023 முதல் 2012,2023 வரை) இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக் காலில் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர் குரு பகவான். எனவே அவர் வக்கிரம் பெறும் பொழுது நற்பலன்களை வழங்குவார். இக்காலத்தில் தடையாகி நின்ற சுபகாரியங்கள் படிப்படியாக நடைபெறும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் கிடைக்கும். நீதிமன்ற வழக்குகள் சாதகமாக முடியும். பயணங்களால் பலன் உண்டு.




# உதிரி வருமானங்களும் வாகன யோகமும் உண்டு!



**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

ச்சி ஏற்படும். மன்னவன் பதினொன்றில் வந்துவிட்டால் செல்வம்வரும். எண்ணியது நிறைவேறும். இனியதொரு வாழ்வமையும். அந்நியர்கள் உதவியுடன் அதிசயிக்கும் தொழில் அமையும். மண்ணுலகில் கடல் தாண்டும் வாய்ப்புகளும் உருவாகும் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் லாப ஸ்தானத்திற்கு குரு வரும்பொழுது பணவரவு திருப்தி தரும். மதிப்பும் மரியாதையும் உயரும். அடிப்படை வசதிகளைப் பெருக் கிக்-கொள்வீர்கள். தொழிலில் புதிய முதலீடுகள் செய்து இழந்த செல்வத்தை மீண்டும் வரவழைத்துக் கொள்வீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பெண் குழந்தைகளின் திருமணங்கள் சிறப்பாக நடைபெற வழி பிறக்கும். பொது வாழ்வில் புதிய திருப்பங்கள் ஏற்படும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நீடித்த நோய் அகலும். தாய்வழி அனுகூலமும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் பலன் தரும் நேரமிது. குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால் களத்திர ஸ்தானம் புனிதமடைகின்றது. இல்லற வாழ்வில் ஏற்பட்ட இடர்பாடுகள் அகலும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகைகைக்கு வந்து சேரும். குடும்பத்தில் விழாக்களை நடத்திப் பார்க்கும் வாய்ப்பு உருவாகும். வேலை காரணமாக பிரிந்திருந்த தம்பதியர் இனி ஒரே ஊரில் பணிபுரிய சந்தர்ப்பம் அமையும்.

**நட்சத்திரப்பாதசாரப்படிபலன்கள்!**

அசுவதி நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். லாப ஸ்தானத்தில் அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் குரு சஞ்சரிப்பதால் தொழிலில் லாபம் கிடைக்கும். படித்து முடித்து வேலை கிடைக்காமல் இருக்கும் பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வரு[illegible] உடல் ஆரோ[illegible] வரவு, செலவுகளில் சரளமான நிலை உருவாகி மகிழ்ச்சி தரும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்துக்கள் இப்பொழுது பலமடங்கு விலை உயர்ந்து லாபத்தை தரும். வியாபாரத்தில் புதிய துறைகளைத் தேர்ந்தெடுக்கும் தேடல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டும் தடைபட்டு வந்த பதவி உயர்வும் கிடைக்கும் நேரம் இது.

**ராகு-கேது பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில், 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகு செல்கின்றார். கன்னி இராசிக்கு கேது செல்கின்றார். இதுவரை குருவுடன் ராகு சேர்ந்திருந்தது. இப்பொழுது ராகு விலகி விட்டதால் குரு கூடுதல் பலம் பெறுகின்றார். எனவே அவரது பார்வைக்கு பலன் அதிகம் கிடைக்கும். அதேநேரத் தில் 10 ஆம் இடத்தில் ராகு சஞ்சரிப்பதால் முத்தான தொழில்கள் வாய்க்கலாம். முன்னேற்றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். உயர் அதிகாரிகள் [illegible]

சரும நோய்களால் அவதிப் பட்டவர்களுக்கு நல்ல மருத்துவ ஆலோசனை மூலம் பழைய உடல் வாகைப் பெற முடியும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம், இலாகா மாற்றம் கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். உறவினர்களின் உதவியும் எதிர்பார்த்தஅளவிற்குகிடைக்கும். மணமாலைக்காக காத்திருப்பவர்களுக்கு மாலையும் உத்தியோகத்திற்காக காத்திருப்பவர்களுக்கு வேலையும் கிடைக்கும். திருமணமானவர்களுக்கு கணவன்-மனைவி உறவில் ஒற்றுமை பலப்படும். குடும்ப நிர்வாகத்தை திறம்படச் செய்து புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்ப்பீர்கள். அசையாச்சொத்துக்கள் உங்கள் பெயரில் வாங்கும்யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்துப் பூஜை அறையில் லட்சுமி படம் வைத்து வழிபடுவது நல்லது. வெள்ளிக்கிழமை தோறும் அஷ்டலட்சுமி கவசம் பாடி, ஜோதி தீபமேற்றி வழிபட்டு வாருங்கள். சகல யோகங்களும் வந்து சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 165





உலக வாழ்க்கையில் அத்தகைய உதாரணங்களைப் பார்த்துமிருக்கிறோம். அம்மாதிரி ஊரார் சிரிப்பதற்கு நம்மை நாமே இடமாக்கிக் கொள்வதா?

இருந்தபோதிலும் சிற்சில விபரங்களை அவளுடைய வாய்ப் பொறுப்பில் கேட்டறிந்து கொள்வதும் அவசியம் தான். அடிக்கடி முத்திரை மோதிரம் வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொள்கிறாளே, எதற்காக? அடிக்கடி தன்னந்தனியாக லதா மண்டபத்தில் போய் உட்கார்ந்து கொள்ளுகிறாளே, அது எதற்கு? யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி அவளைப் பார்க்க வருகிறதாகக் கேள்விப்படுகிறோமே, அவளே ஒப்புக் கொண்டாளே, அது எதற்காக? மந்திரவாதியிடம் இவள் என்னத்தைக் கேட்டறியப் போகிறாள்? மந்திரம் போட்டு இவள் யாரை வசப்படுத்த வேண்டும்? இதெல்லாம் இருக்க, 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' என்ற நிலையில் என்னை எத்தனை காலம் வைத்திருக்கப் போகிறாள்? ஏதோ விரதம், நோன்பு என்று சொல்லுகிறாளே தவிர, என்ன விரதம், என்ன நோன்பு என்று விளங்கச் சொல்கிறாள் இல்லை! கதைகளிலே வரும் தந்திரக்காரப் பெண்கள் தட்டிக் கழிக்கக் கையாளும் முறையைப் போலத்தானே இருக்கிறது? அதற்கு இனிமேல் இடம் கொடுக்கக் கூடாது! இன்றிரவு அதைப் பற்றிக் கண்டிப்பாகப் பேசித் தீர்த்துக் கட்டிவிட வேண்டியதுதான்!

பழுவேட்டரையர் அவருடைய மாளிகை வாசலுக்கு வந்த போது அரண்மனைப் பெண்டிரும் ஊழியர்களும் தாதியர்களும் காத்திருந்து வரவேற்றார்கள். ஆனால் அவருடைய கண்கள் சுற்றிச் சுழன்று பார்த்தும் அவர் பார்க்க விரும்பிய இளையராணியை மட்டும் காணவில்லை. விசாரித்ததில், இன்னும் லதா மண்டபத்தில் இருப்பதாகத் தெரிய வந்தது. அவர் மனத்தில், "நள்ளிரவு ஆன பிறகும் அங்கு இவளுக்கு என்ன வேலை?" என்ற கேள்வியுடன், தம்மை அலட்சியம் செய்கிறாளோ என்ற ஐயமும் கோபமும் எழுந்தன. சிறிது ஆத்திரத்துடனேயே கொடி மண்டபத்தை நோக்கிச் சென்றார்.

இவர் கொடி மண்டப வாசலை அடைந்த போது நந்தினியும் அவளுடைய தோழியும் எதிரே வருவதைக் கண்டார். அப்படி வந்தவள் இவரைக் கண்டதும் நின்று, அவரைப் பார்க்காமல், தோட்டத்தில் குடிகொண்டிருந்த இருளை நோக்கத் தொடங்கினாள். தாதிப் பெண் சற்று அப்பாலேயே நின்றுவிட்டாள்.

பழுவேட்டரையர் நந்தினியின் அருகில் வந்த பின்னரும் அவள் அவரைத் திரும்பிப் பார்க்கவில்லை. நந்தினியைக் கடிந்து கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு வந்ததற்கு மாறாக அவளுடைய கோபத்தை இவர் தணிக்க முயல வேண்டியதாயிற்று!

"நந்தினி! என் கண்மணி! என்ன கோபம்? ஏன் பாரா முகம்?" என்று கேட்டுக் கொண்டு தம் இரும்பையொத்த கையை அவளுடைய தோளின் மீது மிருதுவாக வைத்தார். நந்தினியோ மலரினும் மிருதுவான தன் கரமலரினால் அவருடைய வஜ்ராயுதத்தையொத்த கையை ஒரு தள்ளுத் தள்ளினாள். அம்மம்மா! மென்மைக்கும் மிருதுத் தன்மைக்கும் இத்தனை பலமும் உண்டா?

"என் உயிரே! உன் பட்டுக் கையினால் தொட்டு என்னைத் தள்ளினாயே, அதுவே என் பாக்கியம்! திரிகோண மலையிலிருந்து விந்திய மலை வரையில் உள்ள வீராதிவீரர் யாரும் செய்ய முடியாத செயலை நீ செய்தாய்!

(தொடரும்)




## மூட்டையை வைத்தால்



(நேற்றைய தொடர்ச்சி)

அவசரமாக அந்தக் கதவை மூடிப் பூட்டுப் போட்டாள். எதுவுமே நடவாதது போலத்தன் அறைக்குள் வந்து அமர்ந்தாள் அவள். அந்தத் தீயின் வெப்பத்தால் அவள் தலையில் இருந்த பூ வாடிவிட்டது. இதை அவள் கவனிக்கவில்லை. மீண்டும் அங்கு வந்த இளைஞன் அவளை மேலும் கீழும் பார்த்தான்.

என் கட்டளையை மீறி விட்டாய். அந்த அறையைத் திறந்து பார்த்து இருக்கிறாய். உனக்கு என்ன தண்டனை தெரியுமா? என்று கோபத்துடன் கத்தினான் அவன்.

நான் திறக்கவில்லை, என்று நடுங்கிக்கொண்டே சொன்னாள் அவள். உன் தலையில் உள்ள ரோசாப் பூ எப்படி வாடியது? என்னிடமா பொய் சொல்கிறாய்? நீயும் அந்தத் தீயில் கிடந்து புலம்ப வேண்டியதுதான், என்று அவளை இழுத்துக் கொண்டு சென்றான் அவன்.

என்னை மன்னித்து விடுங்கள், இனி மேல் நான் இப்படிச் செய்ய மாட்டேன், என்று கதறினாள் அவள்.

அவளை அந்தத் தீயில் தள்ளிவிட்டு அறையைப் பூட்டினான் அவன். துணி வெளுப்பவளின் வீட்டிற்கு மீண்டும் வந்தான் அவன், அம்மா! உங்கள் பெண் எங்கள் வீட்டில் நன்றாக இருக்கிறாள். அங்கே அவளுக்கு வேலை அதிகமாக இருக்கிறது. தங்கையையும் அழைத்து வரச் சொன்னாள். அதனால் தான் வந்தேன் என்றான்.

அடுத்தவளும் அவனுடன் புறப்பட்டாள். இருவரும் மாளிகையை அடைந்தார்கள். வழக்கம் போல அவளுக்கும் சிவப்பு ரோசாப் பூவை சூடினான் அவன்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் கடைசி அறையை மட்டும் திறக்காதே, என்று சொல்லி விட்டுச் சென்றான் அவன். ஆர்வத்தை அடக்க முடியாத அவளும் அந்த அறையைத் திறந்தாள்.

திரும்பிவந்த அவன் அவளையும் தீக்குள் தள்ளினான். துணிவெளுப்பவளின் வீட்டிற்கு மூன்றாம் முறையாக வந்தான் அவன், உங்கள் இரு மகள்களும் என் மாளிகையில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அவளுக்கு அங்கே வேலை அதிகமாக இருக்கிறதாம். கடைசித் தங்கையையும் அழைத்து வரச் சொன்னார்கள். அதற்காகத்தான் வந்தேன், என்றான் அவன்.

என் மகள்கள் மகிழ்ச்சியாக இருந்தால் அதுவே எனக்குப் போதும் இவளையும் அழைத்துச் செல், என்றாள் தாய்.

கடைசி மகளையும் அழைத்து கொண்டு அவன் புறப்பட்டான். இருவரும் மாளிகையை அடைந்தனர்.

வழக்கம் போல அவள் தலையிலும் ரோசாப் பூவை அணிவித்தான் அவன்.

என் அக்கா ரெண்டு பேரும் எங்கே? என்று கேட்டாள் அவள்.

வேறு வேலையாக வெளியே சென்று இருக்கிறார்கள். வர ஒரு வாரம் ஆகும். நீ இந்த மாளிகையில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

ஆனால் கடைசி அறையை மட்டும் திறக்கக் கூடாது மீறினால் உனக்குக் கடுந் தண்டனை கிடைக்கும். நான் வெளியே செல்கிறேன். திரும்பி வர நேரம் ஆகும் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் அவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாகிய ஆடையில் எப்பொழுதும் இரு வகை நூல் இருக்கும். நன்மை, தீமையே அவை.

*~ ஷேக்ஸ்பியர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சைவாலய வழிபாட்டில் மாற்றம் ஏற்படாவிட்டால்...

தையிட்டியில் 100 அடி உயரமான தாது கோபுரம் அமைக்கப்பட்டு பௌத்த விகாரை உருவாக்கப்பட்டுள்ளது.

தனியார் காணிகளைக் கபளீகரம் செய்து நடந்த இந்த அக்கிரமத்தை நம் அரசியல்வாதிகள் பெரிதுபடுத்தாமல் இருப்பது ஏன்? என்று புரியவில்லை.

தவிர, தையிட்டியில் அமையப்பெற்ற புத்த விகாரை என்பது நேற்று இன்று கட்டப்பட்டதல்ல.

இது 2015களில் நல்லாட்சி அரசாங்கம் இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டபோது சைவ அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்தன.

தையிட்டியில் விகாரையைக் கட்ட வேண்டாம் என நம் அரசியல் தரப்பு ஆட்சித் தலைவர்களைச் சந்தித்து கோரிக்கை வைக்காதது ஏன்? என்பதும் புரியவில்லை.

எதுவாயினும் தையிட்டி விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்டபோது சிறு எதிர்ப்பு. அதன் பின்னர் தாது கோபுரத்துக்குக் கலசம் வைக்கும்போது ஓர் எதிர்ப்பு என்பதோடு அந்த சம்பவம் முடிந்து போகும்.

இனி பௌத்த சிங்கள மக்கள் தையிட்டிக்கு வந்து வழிபாடு செய்வர்.

சில வருடங்கள் கடந்துபோக, கௌதம புத்த பிரான் தையிட்டியில் வந்து இளைப்பாறினார் என்று வரலாறு புனையப்படும். இது நடந்தேயாகும்.

இவை ஒருபுறமிருக்க, நம் கவலையெல்லாம் விகாரை அமைப்பது பற்றியதல்ல.

மாறாக பெரும்பாலான சைவாலயங்களுக்கு பொதுமக்கள் வழிபாட்டுக்குச் செல்வதில்லை என்பது பற்றியதுதான்.

ஆம், சுற்றிவர மதில்கள், இராஜகோபுரங்கள். உயர்ந்த திருக்கதவுகள். மடப்பள்ளிகள். பரிவாரமூர்த்திகள் என ஏகப்பட்ட கட்டுமானங்கள்.

இதனோடு மூன்று நேரப் பூசைகள், ஆயினும் பூசை செய்யும் சிவாச்சாரியரைத் தவிர வேறு எவரும் அந்த ஆலயங்களில் இல்லை என்பதே நிலைமை.

ஆம், முன்பெல்லாம் மடப்பள்ளியில் நைவேத்தியம் தயாரித்து இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்படும்.

ஆனால் இப்போது பெரும்பாலான சைவாலயங்களின் மடப்பள்ளிகளில் பூனைகளே உறங்குகின்றன.

ஆகமவிதிகள் அடியோடு மீறப்பட்டுவிட்டன. பெரும்பாலான சிவாச்சாரியர்கள் பத்துப் பதினைந்து ஆலயங்களில் நித்திய பூசை செய்கின்றனர்.

ரோபோக்களால் கூட முடியாது என்றளவில் சிவாச்சாரியர்கள் அளவுக்கு மிஞ்சி ஆலயப் பூசைகளைப் பொறுப்பெடுக்க, எதுவும் உருப்படியாக இல்லை என்றபோது, பொது மக்கள் ஆலய வழிபாட்டில் இருந்து விலகி சீரடிசாயி, சத்திய சாயி பாபா, அம்மா பகவான் எனக் குருவழிபாட்டில் நாட்டம் கொண்டுள்ளனர்.

இதன்விளைவு சைவாலயங்களைப் பரிபாலிக்க முடியாத அவலமாக இருக்கும்.

எனவே சிவாச்சாரியர்களிடம் இருந்து ஐம்பது வீதமான ஆலயங்களை சாதாரண மக்கள் பொறுப்பெடுத்து பூசை வழிபாட்டை நடத்த வேண்டும்.

ஆம், நம் முன்னோர்கள் எங்ஙனம் ஆசார சீலர்களாக இருந்து பூசை வழிபாடாற்றினார்களோ அந்தமுறைமைமீண்டும்ஏற்படவேண்டும்.

அப்போதுதான் சைவாலயங்களை நோக்கி அடியவர்கள் அடியெடுத்து வைப்பர்.

இதைச் செய்யாவிடில் ஆலய வழிபாடு அற்றுப் போய்விடும்.

# அவுஸ்திரேலிய யுனைடட் நிறுவனமும் இலங்கையில் எரிபொருளை விநியோகிக்க திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் விநியோகம் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் அவுஸ்திரேலிய நிறுவனப் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மெய்நிகர் ஊடாக நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ள இந்த சந்திப்பில் அவுஸ்திரேலியாவின் யுனைடட் பெற்றோலிய நிறுவனப் பிரதி நிதிகளுடன் இலங்கையில் எரிபொருள் விநியோக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக அடுத்த நடவடிக்கைகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய எரிபொருள் விநியோகம் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ள காலம் தொடர்பில் அடுத்தவாரம் அறிவிப்பதாக குறித்த அவுஸ்திரேலிய நிறுவனப்பிரதிநிதிகள் தெரிவித்ததாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக, மத்திய வங்கி, முதலீட்டு சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்டவற்றின் அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் எரிபொருள் விநியோகத்தினை முன்னெடுப்பதற்கு சீனாவின் சினொபெக், அவுஸ்திரேலியாவின் யுனைடட் பெற்றோலியம், அமெரிக்காவின் ஆர்.எம். பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு அனுமதியை வழங்குவதற்கு கடந்த மார்ச் 27ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய சீனாவின் சினொபெக் நிறுவனத்துடன் எரிபொருள் விநியோகம் குறித்த ஒப்பந்தம் எதிர்வரும் மே மாதத்தில் கையெழுத்திடப்படவுள்ளதோடு 45 நாட்களுக்குள் அதன் செயற்பாடுகளையும் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சிவில் பிரச்சினையை தீர்க்க
# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தேவையில்லை - அத்துரலிய

(கொழும்பு)

நாட்டைப் பிரிப்பது போன்ற பயங்கரவாதம் இப்போது இங்கு இல்லை. இருப்பது சிவில் பிரச்சினை. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தேவை இல்லை. இது மக்களோடு மோதும் விடயம். இவற்றையெல்லாம் ஜனாதிபதி ரணில் கைவிட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏனையவர்களைவிட மற்றவர்களின் கருத்துக்களைச் செவிமடுக்கக்கூடியவர்.

சிக்கலான நேரத்தில் நாட்டைப்பாரமேற்று உடனடியாக வழமையான நிலைமையைக் கொண்டு வந்தவர் ரணில். அந்தக் கௌரவத்தை அவர் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (நி)

## அரச ஊழியர்களுக்கு காணி வழங்கல்
# முறைப்பாட்டாளருக்கு தெளிவுபடுத்துமாறு பிரதமர் செயலகம் கடிதம்

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை அரச வீட்டுத்திட்டத்தில் காணி அற்ற அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவது தொடர்பில் பிரதேச செயலகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் முறைகேடுகள் உள்ளதாக சமூக செயற்பாட்டாளர் ஒருவரினால் பிரதமர் செலயகத்திற்கு முறையிடப்பட்ட நிலையில் அவ்விடயம் தொடர்பில் முறைப்பாட்டாளருக்கு 14 நாட்களுக்குள் தெளிவுபடுத்துவதுடன் பிரதமர் செயலகத்திற்கும் அறிவிக்குமாறும் வவுனியா பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஓமந்தையில் உள்ள அரச வீட்டுத்திட்டத்தில் காணி அற்ற அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவதற்கு வவுனியா பிரதேச செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதற்கான தெரிவு பட்டியலில் ஓய்வுபெற்றவர்கள், வேறு மாவட்டத்தில் வசிப்பவர்கள், ஏற்கனவே காணி பெற்றவர்களின் பிள்ளைகள் என பலருக்கு காணி வழங்கப்படுவதாகவும் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்து பிரதேச செயலாளருக்கு சமூக செயற்பாட்டாளர் ஒருவர் கடிதம் மூலம் தெரிவித்திருந்ததுடன் ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், ஆளுநர் செயலகம் உட்பட்ட பல இடங்களுக்குபிரதிகளும் அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-250)

# 900 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கைக்கு வந்த கப்பல்

(கொழும்பு)

மலேசியாவில் இருந்து 900 சுற்றுலா் பயணிகளை ஏற்றிக்கொண்டு Viking mass பயணிகள் கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இக்கப்பலில் சுற்றுலாப் பயணிகள் கொழும்பு, பின்னவல, கண்டி உள்ளிட்ட இடங்களுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இலங்கைக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. (நி)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** நாச்சிக்குடாவிலும் வவுனியா பிரதேசத்தில் அகத்திமோட்டை கூராய், கோவில்குளம், சீதுவிநாயகங்குளம், விடத்தற் தீவு, மருத்துவமனை, விடத்தற்தீவு-கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** இறால்பண்ணை -பள்ள மடு நெடுங்கடல்மொபிட்டல் கோபுரம் ஆவே-மரியாஜஸ் தொழிற்சாலை, கச்சேரிவளாகம், மன்னார் நீரவழங் கல்சபை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம் கார் கில்ஸ் பூட்சிட்டி- மன்னார், பஸ்தரிப்பிடம், கொன் வெண்ட் வீதி, யிம்றோன்நகர்- மன்னார், மன்னார் நகரம், மூர் வீதி, நளவன்பாட்டிபுதுத்தெரு (பள்ளிமுனை), இளை யோர் சேவைமையத்தடி, ஒல்லிமோட்டை பள்ளி முனை, மன்னார் ஸ்ரீலங்காடெலிகாம், புனிதசெபஸ்டியன் தேவாலயம், யு.சி.மைதானம் -மன்னார் ஆகிய பிரதேசங்களிலும்.

நாளை ஞாயிறு காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம் மின்சாரசபை, ஆளுநர்விடுதி, யாழ்.மாவட்டசெயலகம், துளசிமஹால், யு.எஸ்.விடுதி, மருத்துவமனைவீதி, கச்சேரிநல்லூர் வீதி சந்தி, முலவை ஆகி இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** ஆண்டாங்குளம், கண்ணாட்டி, கறுக்காய்குளம், குருவில், பாலைப்பெருமாள்காடு (மணல் மோட்டை), பள்ளிவாசல்பிட்டி, பரப்பாங்கண்டல், பரப்புக்கடந்தான், சென்யோசப்தேவாலயம், காத்தான்குளம், வட்டக்கண்டல், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, பெரியகரைசல்,பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ்-தலைமன்னார் , தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, பேசாலை-ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady lourds Church Tesalai, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல்திட்டம், கீழியங்குடியிருப்பு, குருசுபாடுகடற்படைமுகாம், படப்பாடி நீர்வழங்கல், பருத்திப்பண்ணைண், பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு, தும்புதொழிற்சாலை, துள்ளுகுடியிருப்புதிட்டம் வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2022/2023 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கை இராணுவத்தின் மேலதிக பங்களிப்புடன் வறிய குடும்பங்களுக்கான இலவச அரிசிப் பொதி வழங்கும் நிகழ்வின் இரண்டாம் கட்டம் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதன் முதல் நிகழ்வு வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன்)

# புத்தூர் மருத்துவமனைக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய மூவர் கைது

(அராலி)

யாழ். புத்தூர் அரசினர் வைத்தியசாலைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதுடன் வைத்தியருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்துடன் தொடர்புடைய 3 பேர் கைது செய்யப்பட்டு மே மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பங்குனித் திங்கள் தினமான கடந்த 10 ஆம் திகதி புத்தூர் சந்தியில் தண்ணீர் பந்தல் அமைத்த இளைஞர்கள் ஒலிபெருக்கியை அதிக சத்தத்தில் ஒலிக்க விட்டுள்ளனர். இதனையடுத்து தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றிருந்த வைத்தியர் ஒலிபெருக்கியின் சத்தத்தை குறைக்கும்படி கேட்டுள்ளார்.

பின்னர் வைத்தியசாலைக்குள் நுழைந்த சிலர் தாக்குதல் நடத்தியதுடன் வைத்தியருக்கு கொலை அச்சுறுத்தலும் விடுத்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வைத்தியர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியிருந்தபோதும் பொலிஸார் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. இதனால் வைத்திய சேவைகளை நிறுத்தப்போவதாக புத்தூர் அரசினர் மத்திய மருந்தகத்தினர் அறிவித்திருந்தனர்.

மேலும் மருத்துவ சங்கம், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஆகியனவும் இது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியிருந்தன. கடும் அழுத்தங்களின் பின்னரே சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் 3 சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். (4-6-104)

# தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இராணுவத் தளபதி யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க மற்றும் இலங்கை இராணுவத் தளபதி விக்கும் லியனகே உள்ளிட்டோர் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் செய்தனர்.

- 2022/2023 ஆம் ஆண்டின் காலபோக அரசின் நெல் கொள்வனவு மற்றும் இருப்பினை விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட அரிசி பகிர்ந்தளித்தல் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்னாயக்க, இராணுவத் தளபதி விக்கும் லியனகே ஆகியோர் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

இந்நிலையில் யாழில் வீதிகளில் ராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு நிகழ்வு நடைபெறும் இடங்களிலும் முப்படையினர் களமிறக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. (4-6-33-104)

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், கோடரிகள், மோட்டார் சைக்கிள்கள், றைசைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பன எதிர்வரும் மே 20 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பன்னை செய்யப்படவுள்ளன.

இவ் ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பொருட்களினை பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும். மற்றும் Covid -19 சூழ்நிலை தொடர்பாக சுகாதார அமைச்சினால் விடுவிக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

ஏலத்தில் பொருளினை கொள்வனவு செய்பவர் உடனடியாக கொடுப்பனவினை பணமாக செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும்.

கொடுப்பனவுகள் பணமாக மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். என்பதுடன் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# வத்திராயனில் வீடு புகுந்து இளைஞன் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வேம்படி வத்திராயன் பகுதியில் இளைஞர் ஒருவன் மீது வீடுபுகுந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் அவசர நோயாளர்காவு சேவை ஊடாக பருத்தித்திறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. தாக்குதலில் காயமடைந்த இளைஞன் அருகிலுள்ள நரசிம்மர் ஆலயத்திற்கு செல்லும் போது தாக்குதல் நடத்தியவர்கள் அவரை நாளாந்தம் கிண்டல் பண்ணி வந்ததாகவும் அந்நிலையில் அன்றையதினம் அவர்களே வீடு புகுந்து தாக் குதல் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாய், தந்தையை இழந்த நிலையில் குறித்த இளைஞனும் அவரது சகோதரனும் மட்டுமே வசித்து வந்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளானவ்ரின் சகோதரன் தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்று வருவதாகவும் அவர் சம்பவதினத்தன்று தனிமையிலேயே இருந்ததாகவும் அவரை அவரது அயலவர்களே மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-6-104)

# முத்தமிழ் விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி- பெரிய மாவடி சித்திவிநாயகர் கலை மன்றத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு முத்தமிழ் விழா நிகழ்வுகள் இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்களில் சித்தி விநாயகர் கலை அரங்கத்தில் இரவு 7.05 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

நிலைய தலைவர் மு.கதிரவேலு தலைமையில் முதலாம் நாள் நிகழ்வுகள் இடம்பெறும்.

நிகழ்வில் பட்டிமன்றம், இசை நிகழ்வு, இலக்கிய நாடகம் மற்றும் சிந்துநடை நாடகம் ஆகியன இடம்பெறவுள்ளன.

அத்துடன் இரண்டாம் நாள் நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக பளுதூக்கல் போட்டியில் சர்வதேச ரீதியாக தென்மராட்சிக்கு புகழைத் தேடித் தந்த ச.புசாந்தனுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அத்து டன் நகைச்சுவை நாடகம், சிறுவர்களுக்கான நாடகம், காதலுக்கு மருந்து நாடகம் மற்றும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (4-6-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 |
| தக்காளி | 120 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 200 |
| கோவா | 200 | 180 | 240 |
| கரட் | 120 | 200 | 300 |
| பூசணி | 60 | 60 | 40 |
| புடோல் | 100 | 140 | 150 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 350 | 300 |
| வெண்டக்காய் | 150 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 160 | 150 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 240 | 150 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 800 |
| போஞ்சி | 250 | 200 | 350 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 140 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 60 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 |
| ஈரப்பலா | 120 | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 95 மேலதிக...

றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 120 வாக்கு களும் எதிராக 25 வாக்குகளும் அளிக் கப்பட்டன.

இதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப் பட்ட கடனுதவி தொடர்பான யோசனை 95 மேலதிக வாக்குகளால் நிறைவேற் றப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (ம-9)

## பயங்கரவாத...

றத்தில் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பெருமளவில் கருத்தாடல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட நீதி அமைச்சர், மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு சட்டமூலத் தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப் போவதில்லை எனக் கூறினார்.

நாட்டு மக்களின் தேவைக்கு ஏற் பவே அரசாங்கம் பாராளுமன்றத்தில் சட்டங்களை உருவாக்குவதாகவும் பலரதும் கருத்துக்களைப்பெற்று தேவை யான திருத்தங்களை மேற்கொண்ட தன் பின்னரே அதனை பாராளுமன்றத் தில் சமர்ப்பிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-9)

## முல்லை சிலா...

69 வயதுடைய அப்புத்துரை வேலாயுதம் (டிஸ்கோ ஐயர்) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

குறித்த வீட்டில் அர்ச்சகர், அவர் மனைவி மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த உறவினர் என மூவரும் உறங்கிக் கொண்டிருந்த வேளை, கொள்ளையர்கள், வீட்டின் ஜன்னல் கம்பியை உடைத்து வீட்டுக்குள் நுழைந்து, அர்ச்சகரின் மனைவியை யும் வயதான உறவினரையும் கை, கால் களை கட்டி, வாயும் கட்டி வைத்து விட்டு, அர்ச்சகர் மீது தாக்குதல் நடத்தியுள்ள னர்.

வீட்டுக்குள் நுழைந்த இரு சந்தேக நபர்களும் முகத்துக்கு துண்டுகளை கட்டி, கையில் வாள், பொல்லுகள் கொண்டுவந்ததாக சம்பவத்தில் பாதிக் கப்பட்ட உறவினர் தெரிவித்தார். கொள் ளையர்கள் வீட்டில் இருந்த பணம் மற்றும் நகை என்பவற்றை கொள்ளை யிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள்.

இந்நிலையில் கை, கால்கள் கட்டப் பட்ட நிலையில் காணப்பட்ட மனைவி மற்றும் உறவினர் பெரும் போராட்டத் துக்கு மத்தியில் அவற்றை அவிழ்த்து, வெளியே சென்று பார்த்தபோது, அர்ச் சகர் உயிரிழந்து காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வருவதோடு சம்பவ இடத்துக்கு சென்று முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சர வணராஜா சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டுள் ளார். (ம-9)

## இந்தியா...

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்றுக் காலை இலங்கைக் கான இந்திய உயர்ஸ்தானிகரை சந் தித்தபோதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இதனிடையே, இலங்கை தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக வும் அந்த விடயம் சார்ந்த செயற்பாடு களின் நிலைமை குறித்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய உயர்ஸ்தானிகருக்கு எடுத்துரைத் துள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன் னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சித் தலை வர் வேந்தன் ஆகியோர் இந்த சந்திப் பில் பங்கேற்றதாக அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)

## வவுனியா...

காட்டி தொல்பொருட் திணைக்களம் மற்றும் பொலிஸார் அதற்கு தடை களை ஏற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் கடந்த இருதினங்க[illegible] பெற்றிருந்தது [illegible]

## மீண்...

திஷ்டை செய்யும் நிகழ்விற்கு பொலிஸார்மற்றும் தொல்பொருட் திணைக்களத்தி னர் நேற்று மீண் டும் தடை ஏற் படுத்தினர்.

வெடுக்குநாறி மலையில் அழிக் கப்பட்ட விக்கிர கங்களை மீள பிர திஷ்டை செய்வ தற்கு வவுனியா நீதிமன்றம் நேற் றையதினம் உத் தரவு வழங்கியி ருந்தது.

இதனையடுத்து நேற்றுக் காலை ஆலயத்தில் விக் கிரகங்கள் பிர திஷ்டை செய்வ தற்கான ஏற்பாடு கள் முன்னெடுக் கப்பட்டிருந்தன.

குறித்த செயற் பாட்டினை கண் காணிக்கும் நோக் குடன் தொல் பொருள் திணைக் களத்தின் உத்தி யோகத்தர், மற் றும் பொலிஸார் ஆலய வளாகத் திற்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய் யும் நிகழ்வு ஆரம் பிக்கப்பட்ட போது அதற்கு தடையை ஏற்படுத்தும் நோக் குடன், புதிய விக்கிரகங்களை வைக்க வேண் [illegible] [illegible] இருந்த வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு நீதி மன்றம் அனுமதி வழங்கியது. உடைக் கப்பட்ட விக்கிரகங்களை அதே இடத் தில் மீண்டும் வைப்பதற்கும் நீதிமன் றம் உத்தரவு வழங்கியிருந்தது. இத னையடுத்து நேற்றுக் காலை சுபநேரத் தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்கள் அனைத்தும் மீண்டும் வைக்கப்பட் டது. பல சிரமங்களுக்கு மத்தியில் புதிய விக்கிரகங்கள் மலையின் உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஆலயத்தின் நிர்வாகத்தினர், பூசாரியார், சமூக ஆர் வலர்கள், வேலன் சுவாமிகள், அகஸ் தியர் சுவாமிகள், அரசியல் தரப்பினர், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த விக்கிரகங்கள் சிவபூமி அறக்கட்டளையினரால் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9,299)

## 1008...

அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று 1008 பானையில் பொங்கல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நாகபூசணி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் இடம்பெறுவதனை முன் னிட்டு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில், சீரணி கோவில் வீதி யில் குறித்த பொங்கல் நிகழ்வு நடை பெறவுள்ளது. (ம)

விக்கிரகங்களையே மீள வைக்குமாறு பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட ஆலயத் தரப்பினர், முன்னர் வைக்கப் பட்டிருந்த விக்கிரகங்கள் முழுமை யாக உடைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய விக்கிரகங்கள், களவாடப்பட்டுள்ளது. உடைந்த சிலைகளை மீண்டும் எப்படி வைக்க முடியும், எமது சமய வளக்கத் தின் படி அது முறையான செயற்பாடு இல்லை என்று தெரி வித்தனர்.

இதனால் அதிகாரிகளுக்கும் அவர் களுக்கும் இடையில் சற்றுநேரம் குழப்பமான நிலைமை ஏற்பட்டிருந்தது. எனினும் திட்டமிட்டபடி அனைத்து விக்கிரகங்களும் வைக்கப்பட்டது.

இதேவேளை நேற்று ஆலய வளா கத்திற்கு வருகைதந்த பொலிஸார் மற்றும் தொல்பொருட் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோர் தமது பாதணிகளை கழற்றாது ஆலய சூழ லிற்குள் நின்றனர். (ம-9,299)

## அநீதியான...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியி டும்போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார். (ம-9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1555
வெற்றி இலக்கங்கள்
தனுசு 8 6 1 1 8 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1130
N 07 71 73 78
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.04.28
சீட்டிழுப்பு இலக்கம் 3342
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
P 01 18 51 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1448
Q 02 21 31 46 51

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.28
சீட்டிழுப்பு இலக்கம் 409
மகரம் 04 31 37 56 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/28
சீட்டிழுப்பு இலக்கம் 5100
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
B 7 1 1 8 5 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2074
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.04.28
தினம் வெள்ளிக்கிழமை
M 02 32 43 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,676,260/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.28
சீட்டிழுப்பு இல : 4235
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 5,491,620/-
வெற்றி இலக்கங்கள் 13 32 40 58 E
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 317
சீட்டிழுப்பு திகதி 2023.04.28
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 14 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,897,540/-
DLB

ராசி
ரூ. 2,205,098.40
வெற்றி இலக்கங்கள் 06 32 35 54
திகதி 2023-04-28
வெற்றி வாரம் 3786
வர்ணம் கரும் நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,346,360/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 31 07 28 29 53
சுப்பர் இலக்கம்
1250
2023.04.28
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 326,199,079.80
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1900
சீட்டிழுப்பு திகதி : 2023.04.28
ரூ. 5,950,120/-
வெற்றி இலக்கங்கள் 08 37 39 62 E
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## பாலசுப்பிரமணியம் கவிராஜ் (கவி)





அன்னை மடியில்
16.05.1994

ஆண்டவன் அடியில்
29.04.2019

எங்கள் கவியே! எப்போது காண்போம் உன் முகத்தை - என்
உதிரம் கொதித்து உள்ளம் கலங்குதையா!
இவ்வுலகை விட்டுப் பிரியும் வேளையிலும்
" அம்மாவிடம் அழைத்துச் செல் " என்றவனே!
ஆறுமாடா தம்பி எங்கள் மனம்! அடங்குமா எம் கவலை!
சிரித்தமுகம் கொண்ட என் சித்தப்பாவே!
சிறுவன் நான் கலங்குவதை அறிவாயோ?
சந்தனப்பொட்டும் சாந்தமான முகமும் கொண்டவனே
சற்றேனும் ஏற்கவில்லை உன் மறைவு எமக்கு
" மத்தியின் " தாய்கூட மனம் கலங்கினாளே
மகனே உன் மரணத்தால்
"பிம்புத்" உறவுகளும் பிரிந்து உன்னைத் தேடினரே!
நான்கு ஆண்டுகள் ஆனபோதும் கவியே,
நாங்கள் மறப்போமா உன்னை...
இறைவன் நிழலில் உன் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சோலைபுரம், கொட்டடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 386 8675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.